**சிறைக்கைதிகள் நலன்புரி நிதியம் - 2020**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

சிறைக்கைதிகள் நலன்புரி நிதியத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமான செலவினக் கணக்கு, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்புக்கள் உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் மற்றும் 1971 இன் 38ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம், எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து நிதியத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் தயாரித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிதியம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது நிதியத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதியத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிதியத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு நிதியம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களை தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய

தொடர்ந்து செயற்படுவதற்கு நிதியத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிதியத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- நிதியத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- நிதியத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் நிதியம் இணங்கியிருந்ததா என்பதும்,

- நிதியம் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- நிதியத்தின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்களை தயாரித்தல் தொடர்பிலான கணக்காய்வு அவதானிப்புகள்

### 1.5.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| உரிய நியமம் தொடர்பான இணங்காமை | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 01 இன் 02 ஆம் பந்தியின் பிரகாரம், பொதுவான தேவைப்பாட்டுக்காக இனைத்து நிதிக்கூற்றுக்களும் அட்டுறு அடிப்படையில் | வெலிக்கடை மற்றும் வட்டருக்க சிறைச்சாலைகளில் சில தரவுகளின் உள்ளீட்டிலான தவறு காரணமாக அட்டுறு வருமமானமாக மற்றும் கடந்த வருடத்தின் | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் செயற்பட வேண்டும். |

| | |
|---|---|
| கணக்கு வைக்கப்பட வேண்டிய போதிலும், நிதியத்தின் இரு வருமான மூலங்கள் காசு அடிப்படையில் கணக்கு வைக்கப்பட்டிருந்தது. | வருமானமாக விபரங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளது. சிகாஸ் பதிவுகள் மற்றும் விபரங்கள் இணங்காமையால் மீள மேற்கொள்ளப்பட்ட விசாரணையின் போது குறித்த உத்தியோகத்தர்களால் அந்த அறிக்கைகளை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதுடன், இறுதி அறிக்கைகளை கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கும் சந்தர்ப்பத்தில் அந்த திருத்தங்களுடனான அறிக்கையொன்று கிடைத்திருக்கவில்லை. இதற்காக உரிய அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. |

### 1.5.2 கணக்கீட்டுக் கொள்கைகள்

| உரிய நியமம் தொடர்பாக இணங்காமை | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சிறைச்சாலை நிறுவனங்களுக்கு கிடைக்கும் நுகர்வுப் பொருட்களை கணக்கு வைப்பதற்காக கணக்கீட்டுக் கொள்கையொன்று இனங்காணப்பட்டிராத காரணத்தால் மீளாய்வாண்டின் ரூபா 2,195,395 ஆன நுகர்வுப் பொருட்களின் பெறுவனவு மற்றும் இருப்பு நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. | சிறைக்கைதிகளின் பயன்பாட்டுக்காக நுகர்வுப்பொருட்கள் பரிசளிக்கப்படுவதுடன், அந்த பொருட்களை சிறைக்கைதிகளின் பயன்பாட்டுக்கு வழங்குவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டது. அப்போது அந்த பொருட்கள் பயன்படுத்தப்பட்டமையால் அவற்றை இருப்பாக இறுதிக் கணக்குகளில் சீராக்கம் செய்யப்பட மாட்டாது. இவ்வாறு சொத்துக்களை கணக்கு வைத்தலை கிரமப்படுத்துவதற்காக சொத்துக்கள் நடப்பாண்டு முதல் ஒதுக்கீட்டு கணக்கின் ஊடாக அறிக்கையிடுவதற்கு உரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன. | நுகர்வுப் பொருட்களின் வெகுமதிகளை கணக்கு வைப்பதற்கான கணக்கீட்டுக் கொள்கையொன்று அறிமுகப்படுத்தப்பட வேண்டும். |

### 1.5.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மைகள் | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) தேசிய பொதுச் சபையின் 1979 இன் 54ஆம் இலக்க சிறைச்சாலைகள் திணைக்களத்தின் சிறைச்சாலைகள் நலன்புரி நிதியத்தின் திருத்தப்பட்ட அதிகாரச்சட்டத்தின் 4 ''அ'' பிரிவு | பொது வைப்புக் கணக்கு மற்றும் காப்பகங்களில் காணப்பட்ட ஒரு வருடத்திற்கு குறையாத காலத்தினுள் உரித்து கோரப்படாத ரூபா 4,554,557 ஆன உரித்துக் கோரப்படாத வேதனங்கள் மற்றும் தனியாரின் பணம் நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்டிருக்கவில்லை. | உரிய நிறுவனங்களால் உரித்து கோரப்படாத பணம் தொடர்பில் காலப் பகுப்பாய்வு அறிக்கையொன்றினை கோரி, அவற்றை சிறைக்கைதிகள் நலன்புரி நிதியத்திற்கு செலவு வைப்பதற்கு சிறைச்சாலை அதிகாரிகளுக்கு உரிய அறிவுரைகளை வழங்குவதற்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | அதிகாரச்சட்டத்தின் பிராகரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) 2020 ஆகஸ்ட் 28ஆந் திகதிய 01/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 15.1 பந்தியில் உள்ளடக்கப்பட்ட இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின்<br>i. நிதிப்பிரமாணம் 876 2(ஆ) பந்தி | நிதியத்தினை தொடர்ந்தும் நடாத்திச் செல்லுதல் அவசியமற்றது அல்லது எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களை அரச நிதியினை பயன்படுத்தி அடையப்பட்டுள்ளது என காணக்கூடிய போது அந்த நிதியத்தின் பணிகளை உடனடியாக நிறுத்துவதற்க நடவடிக்கை எடுக்க வேண்டும். எவ்வாறான போதிலும் இந்த நிதியத்தின் மீதியானது நலன்புரி பணிகளுக்கு போதுமானதாக இல்லாதிருந்தமையால் திணைக்களத்தின் செலவினத் தலைப்பின் நிதி அதற்காக செலவிடப்பட்ட போதிலும், கணக்காய்வு திகதி வரையிலும் சுற்றறிக்கை அறிவுரைகளுக்கமைய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிதியத்தின் மீதி சிறைக்கைதிகளின் நலன்புரி நடவடிக்கைகளுக்கு போதுமானதாக காணப்படுவதனால் மற்றும் நிதயத்திற்கு வருமானம் கிடைக்கும் வழிகள் நிச்சயமற்றிருத்தல், வேறு எந்த நிதி ரீதியான பங்களிப்பும் இல்லாதிருத்தால் போன்ற காரணங்களின் அடிப்படையில் கணக்காய்வினால் குறிப்பிடப்பட்டுள்ள 01/2020 மற்றும் 2020 ஆகஸ்ட் 28ஆந் திகதிய நிதி அமைச்சின் சுற்றறிக்கையின் முதல் பகுதியின் 15.1 பந்தியின் 2(அ) பிரகாரம், தொடர்ந்தும் நடாத்திச் செல்லுதல் அவசியமற்றது அல்லது எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்கள் அரச ஒதுக்கீட்டு அதிகாரச்சட்டத்தின் அங்கீகரிக்கப்பட்ட அரச பாதீட்டின் கீழ் அடையப்பட்டுள்ளது என | வருமான மூலங்களை அதிகரித்துக்கொள் ளல் அல்லது நிதியதத்தினை தொடர்ந்தும் நடாத்திச் செல்லல் தேவையற்றது எனின் சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | காணக்கூடிய போது அந்த நிதியத்தின் பணிகளை உடனடியாக நிறுத்துவதற்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற விடயம் தொடர்பில் கவனம் செலுத்தி நிதியத்தின் எதிர்காலப் பணிகள் தொடர்பில் செயற்படுவதற்கு உரிய பணிகள் மேற்கொள்ளப்படுகின்றமை. | |
| ii. | நிதிப்பிரமாணம் 877 2(அ) பந்தி | நிதியத்திற்காக தனியானதொரு வங்கிக் கணக்கொன்று பேணப்பட்டிராததுடன், நலன்புரி நிதியத்தின கொடுக்கல் வாங்கல்கள் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ வங்கிக் கணக்கின் கீழ் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | கணக்காய்வு அவதானிப்புகளின் ஊடாக நிதிப்பிரமாணம் 877 மற்றும் அரச நிதிச் சுற்றறிக்கை 01/2020 இன் பிரகாரம், நிதியத்திற்க தனியானதொரு வங்கிக் கணக்கொன்று பேணப்பட வேண்டும் என சுட்டிக் காண்பிக்கப்பட்டுள்ளமையால், குறித்த கொடுக்கல் வாங்கல்களுக்காக புதிய வங்கிக் கணக்கொன்றை திறப்பததற்கு உரிய பணிகளை மேற்கொள்ள குறித்துவைத்துக் கொள்ளப்பட்டது என்பது. | நிதிப்பிரமாணம் 877 இன் பிரகாரம், நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கான நிதியத்தின் நிதி விளைவு ரூபா 763,088 ஆன பற்றாக்குறையொன்றாக காணப்பட்டதுடன் ஒப்பிடும் போது அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான நிதி விளைவுகள் ரூபா 1,359,184 ஆன பற்றாக்குறையாக இருந்தமையால் நிதி விளைவுகளில் ரூபா 596,096 தொகையான அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது. மீளர்வாண்டின் போது நிதியத்தினால் பெறுமானத்தேய்வு தவரி வேறு எதுவித செலவினமும் மேற்கொள்ளப்பட்டிராமை இது தொடர்பில் தாக்கமளித்திருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிதியத்தின் முன்னேற்றத்தினை அளவீடு செய்வதற்காக செயலாற்றல் குறிகாட்டிகள் அறிமுகப்படுத்தப்பட்டிராததுடன், சிறைச்சாலைகளில் நடாத்தப்பட வேண்டிய நிகழ்ச்சித்திட்டங்களின் தன்மை, பங்குப்பற்ற வேண்டிய ஆண்/பெண் சிறைக்கைதிகளின் எண்ணிக்கை, செலவிட நேர்கின்ற கிரயம் உள்ளடங்களாக முன்னைய திட்டங்கள் தயாரிக்கப்பட்டு அந்த திட்டங்களின் பிரகாரம் செயன்முன்னேற்றம் அறிக்கையிடப்படாத காரணத்தால் நிதியத்தின் நோக்கங்களை நிறைவேற்றுதல் தொடர்பிலான நிதி மற்றும் பௌதீக செயலாற்றலை மதிப்பீடு செய்ய முடியாதிருந்தது. | கணக்காய்வு அவதானிப்புகளுடன் இணங்குகின்றேன். நிதியத்தின் வருமான வழிகள் நிச்சயமற்ற நிலையில் காணப்படுதல், அரச பங்களிப்பு இல்லாதிருத்தல் போன்ற விடயங்களின் அடிப்படையில் நிதியத்தின் மீதி போதுமானதாக இல்லாதிருந்தமையால் மீளாய்வாண்டின் செலவினங்களை மேற்கொள்ள போதியளவான நிதி காணப்படாமை போன்ற விடயங்களின் அடிப்படையில் மீளாய்வாண்டிற்காக மதிப்பீடொன்று மேற்கொள்ளப்படாததுடன், இந்த நிதியினை வலுவூட்டி எதிர்காலத்தில் மேலும் நிதியத்தின் செயன்முன்னேற்றத்தினை அளவீடு செய்வதற்காக செயலாற்றல் குறிகாட்டிகை அறிமுகப்படுத்த உரிய நடவடிக்கை எடுக்குமாறு சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் (புனர்வாழ்வு) இற்கு அறிவுரை வழங்குவதற்கு குறித்துவைத்துக் கொள்ளப்பட்டது என்பது. | நிதியத்தின் நிகழ்ச்சித்திட்டங்களுக்காக முன்கூட்டிய திட்டமொன்று மற்றும் அந்த திட்டத்தின் பிரகாரம் செயலாற்றலை மதிப்பீடு செய்வதற்கு செயலாற்றல் குறிகாட்டிகளை அறிமுகப்படுத்தி மதிப்பீடுகளை மேற்கொண்டு செயன்முன்னேற்றம் அறிக்கையிடப்பட வேண்டும். |
| (ஆ) | சிறைக்கைதிகள் விடுதலை பெற்ற பின்னர் புனர்வாழ்வுக்கு உதவும் பின்னர் பொறுப்பேற்கும் சேவைகளுக்காக நிதியத்திலிருந்து எதுவித நிதியும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வு அவதானிப்புகளுடன் இணங்குகின்றேன். நிதியத்தின் வருமான மூலங்கள் நிச்சயமற்ற நிலையில் காணப்படுதல், அரச பங்களிப்பு இல்லாதிருத்தல் போன்ற விடயங்களின் அடிப்படையில் நிதியத்தின் | சிறைக்கைதிகள் விடுதலை பெற்ற பின்னர் புனர்வாழ்வுக்கு உதவும் பின்னர் பொறுப்பேற்கும் சேவைகளுக்காக பொருத்தமான வேலைத்திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| | மீதி போதுமானதாக இல்லாதிருந்தமையால் நிதியத்தில் போதிய நிதி காணப்படாமையால் மீளாய்வாண்டிற்காக மதிப்பீடொன்று மேற்கொள்ளப்படாததுடன், மீளாய்வாண்டிற்காக மதிப்பீடெடான்று மேற்கொள்ளப்படாததுடன், நிதியத்தின் நோக்கங்களை அடைந்துக்கொள்வதற்காக வெளிவாரி நிறுவனங்கள் மற்றும் தன்னார்வ அமைப்புகளின் அனுசரணையுடன் நிகழ்ச்சித்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டன. | |

**3.2 தொழிற்பாட்டு செயற்திறனின்மைகள்**

---

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சிறைக்கைதிகளுக்கான நலன்புரி நிதியமொன்றினை தாபித்தல், சிறைக்கைதிகளின் பொது நலனுக்காக அதிலிருந்து செலவினம் மேற்கொள்ளல் மற்றும் அதனுடன் தொடர்புடைய அனைத்து விடயங்கள் தொடர்பிலும் ஏற்பாடுகளை மேற்கொள்ளும் பொருட்டு தேசிய அரச சபையின் 1973 இன் 18ஆம் இலக்க சிறைச்சாலைகள் திணைக்களத்தின் சிறைக்கைதிகளக்கான நலன்புரி நிதிய அதிகாரச்சட்டம் உருவாக்கப்பட்டிருந்தது. எவ்வாறான போதிலும், மீளாயவாண்டின் போது சிறைக்கைதிகளின் நலன்புரி விடயங்களுக்காக எதுவித நிதியத்திலிருந்து எதுவித செலவினமும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | 2020ஆம் ஆண்டின் போது நலன்புரி நிதியத்தின் நலன்புரி நடவடிக்கைகளுக்காக செலவினம் மேற்கொள்வதற்காக நிதியத்தில் நிலவிய மீதியானது போதுமானதாக இல்லாதிருந்ததுடன், திறைசேரியினது அல்லது அரசின் வேறு எந்த நிதியுதவியும் இல்லாதிருந்தமையால் 2020ஆம் ஆண்டுக்காக மதிப்பீடொன்றும் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. 2020ஆம் ஆண்டின் போது நிதியத்தினால் எதுவித செலவினம் மேற்கொள்ளப்பட்டிராத போதிலும், சிறைக்கைதிகளின் நலன்புரி நடவடிக்கைகளுக்காக வெளிவாரித் தரப்பினரிடமிருந்து கிடைக்கும் பங்களிப்பின் ஊடாக அந்த பணிகள் பெருமளவில் நிறைவேற்றப்பட்டிருந்தது. | அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 4. கணக்களிதகைமையும் நல்லாளுகையும்

### 4.1 வருடாந்த செயலாற்றல் அறிக்கையை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தல்

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2020 ஆகஸ்ட் 28ஆந் திகதிய மற்றும் 01/2020ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் ஊடாக நிதிப்பிரமாணம் 877 (2)(ஈ) இன் பிரகாரம், கணக்காண்டு நிறைவடைந்து 02 மாதங்களினுள் நிதியத்தின் சான்றுபடுத்தப்பட்ட நிதிக்கூற்றுக்களுடன் செயலாற்றல் அறிக்கையொன்றும் அரச நிதித் திணைக்களத்திற்கான பிரதிகளுடன் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டிற்கான நிதியத்தின் நிதிக்கூற்றுகளுடன் வருடாந்த செயலாற்றல் அறிக்கையொன்று சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | 2020/01 இன் பிரகாரம், 2021ஆம் ஆண்டுக்குரிய செயலாற்றல் அறிக்கைகள் உரிய முறையில் தயாரிக்கப்பட்டுள நிதிக்கூற்றுக்களின் பிரதிகளுடன் அரச நிதித் திணைக்களம் மற்றும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்க குறித்துவைத்துக் கொள்ளப்பட்டது என்பது. | சுற்றறிக்கை அறிவுரைகளுக்கமைய நடவக்கை எடுக்க வேண்டும். |

### 4.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2006 திசெம்பர் 26ஆந் திகதிய **PF/423** ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 4.1ஆம் பந்தியின் பிரகாரம், மீளாய்வாண்டுக்குரிய நிதியத்தின் வருடாந்த பாதீடு தயாரிக்கப்பட்டு உரிய அங்கீகாரங்களுடன் செப்தம்பர் 30ஆந் திகதிக்கு முன்னர் தேசிய வரவு செலவுத் திட்ட பணிப்பாளர் மற்றும் அரச நிதிப் பணிப்பாளர் நாயகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | நிதியத்தின் வருமான மூலங்கள் நிச்சயமற்ற நிலையில் காணப்படுதல், அரச பங்களிப்பு இல்லாதிருத்தல் போன்ற விடயங்களின் அடிப்படையில் நிதியத்தின் மீதி போதுமானதாக இல்லாதிருந்தமையால் மீளாய்வாண்டிற்கான மதிப்பீடொன்று மேற்கொள்ளப்படவில்லை என்பதை தெரிவித்துக்கொள்கின்றேன். | சுற்றறிகையின் பிரகாரம் வருடாந்த பாதீடு தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |